வகுப்பு : 12

தேர்வு எண் 1 2 3 0 2 X

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024 - 25

## வரலாறு

நேரம் : 3.00 மணி | | மொத்த மதிப்பெண்கள் : 90

பகுதி – I

குறிப்பு (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20X1=20

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்.
அ) சுபாஷ் சந்திர போஸ் ஆ) காந்தியடிகள் இ) A.O. ஹியூம் ஈ) பாலகங்காதர திலகர்

2. இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும் 'Poverty and Un-British Rule in India என்ற நூலை எழுதியவர்.
அ) பாலகங்காதர திலகர் ஆ) கோபால கிருஷ்ணகோகலே
இ) தாதாபாய் நௌரோஜி ஈ) எம்.ஜி.ரானடே

3. சூரத்தில் நடைபெற விருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?
அ) அரவிந்தகோஷ் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) ஃபெரோஸ் ஷாமேத்தா ஈ) லாலாலஜபதி ராய்

4. கூற்று : வ.உ.சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தை தொடங்கினார்.
காரணம் : இந்திய கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.
அ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால், காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி ஆனால், காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

5. பனாரஸ் இந்து பல்கலைகழகம் யாரால் நிறுவப்பட்டது.
அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) மதன்மோகன் மாளவியா
இ) திலகர் ஈ) பி.பி.வாடியா

6. 1916 ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்.
அ) முஸ்லீம் லீக் எழுச்சி ஆ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தற்காலிக இணைப்பு
இ) முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது
ஈ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறை போக்கு

7. தமிழ் நாட்டில் உப்பு சத்தியாகிரக யாத்திரையை தலைமையேற்று நடத்தியவர் ------------
அ) வ.உ.சிதம்பரம் ஆ) ராஜாஜி இ) சுப்ரமணிய சிவா ஈ) வ.வே. சுப்ரமணியம்

8. சைமன் கமிஷன் காங்கிரஸால் ஏன் புறக்கணிக்கப்பட்டது?
அ) குழு அறிக்கையில் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவது குறித்த பரிந்துரை இல்லை
ஆ) சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு இல்லை இ) அக்குழுவில் இந்தியர்கள் இடம் பெறவில்லை
ஈ) அது முழுச்சுதந்திரத்திற்கான வாக்குறுதியைக் கொண்டிருக்கவில்லை

9. பின்வரும் நிகழ்வுகளைச் சரியான காலவரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.
i) கேதா சத்தியாகிரகம் ii) சம்பரான் இயக்கம்
iii) பிராமணரல்லாதார் இயக்கம் iv) வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்
அ) ii, iii, i, iv ஆ) iii, ii, i, iv இ) ii, i, iv, iii ஈ) ii, i, iii, iv

10. கல்பனாதத் எதனுடன் தொடர்புடையவர்.
அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட்ரி பப்ளிக் அசோசியேஷன் ஆ) வங்காள சபை
இ) இந்திய குடியரசு ராணுவம் ஈ) இவற்றில் ஏதுமில்லை

11. பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?
அ) எம். என். ராய் ஆ) பகத் சிங் இ) எஸ். ஏ. டாங்கே ஈ) ராம் பிரசாத் பிஸ்மில்

12. லண்டன் பிரிவுக் கவுன்சிலில் இடம் பெற்றுள்ள முதல் இந்தியர் ----------
அ) ரஹமத்துல்லாசயானி ஆ) சர்சையது அகமது கான்
இ) சையது அமீர் அலி ஈ) பஃருதீன்யாப்ஜி

13. காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லீம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது.
அ) 22 டிசம்பர், 1940 ஆ) 5 பிப்ரவரி, 1939 இ) 23 மார்ச், 1937 ஈ) 22 டிசம்பர், 1939

14. நிதி ஆயோக் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு ----
அ) 1950 ஆ) 1962 இ) 2015 ஈ) 2017

15. இந்திய தேசிய இராணுவப்படைவீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார்?
அ) ஜவஹர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு இ) இராஜாஜி ஈ) சுபாஷ் சந்திர போஸ்

16. கூற்று: வெள்ளையனே வெளியேறு இயக்கம் அதன் குறிக்கோளை அடையவில்லை.
காரணம்: அப்போதைய பிரிட்டிஷ் அரசு கடுமையான அடக்கு முறையைப் பின்பற்றியது.
அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு. ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

17. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அ) ஜே.வி.பி குழு | – | 1. 1928 | | அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) கிரிப்ஸ் மிஷன் | – | 2. மாநில மறுசீரமைப்பு ஆணையம் | | ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) பசல் அலி | – | 3. 1948 | | இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) நேரு குழு அறிக்கை | – | 4. எல்லைவரையறை ஆணையம் | | ஈ) | 4 | 2 | 3 | 1 |

18. ஆந்திர மாநில கோரிக்கையினை முதன்முதலில் எழுப்பியவர் ------
அ) பொட்டி ஸ்ரீராமுலு ஆ) பட்டாபி சீத்தாராமையா இ) கே.எம்.பணிக்கர் ஈ) டி. பிரகாசம்

19. பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்
அ) ராம் மனோகர் லோகியா ஆ) ஜெயபிரகாஷ் நாராயணன்
இ) வினோபா பாவே ஈ) சுந்தர்லால் பகுகுணா

20. 1951 ஆம் ஆண்டில் இந்தியாவில் எத்தனை பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பட்டன?
அ) 5 ஆ) 7 இ) 6 ஈ) 225

## பகுதி - II

7x2=14

**எவையேனும் 7 வினாக்களுக்கும் குறுகிய விடையளிக்கவும். (கட்டாய வினா எண் 30)**

21. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.
22. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களைக் கண்டறிக.
23. கிலாஃபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?
24. பி. ஆர். அம்பேத்கரால் வழிநடத்தப்பட்ட மஹத் சத்தியாகிரகம் பற்றி அறிவது என்ன?
25. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை ஜே.என்.டாடா அழைக்கப்பட காரணம் என்ன?
26. தனித்தொகுதி முறையினைப் பற்றி எழுதுக.
27. கேப்டன் மோகன் சிங் எவ்வாறு இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்தினார்?
28. ஜே.வி.பி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?
29. ஜவஹர்லால் நேரு தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முன்னிருந்த முக்கிய கடமைகள் யாவை?
30. தாதாபாய் நௌரோஜி பற்றி சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - III

7x3=21

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி. (கட்டாய வினா எண் 40)**

31. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.
32. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
33. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களைப் பற்றி விவாதிக்கவும்.
34. ஜோதிராவ் பூலே பற்றி நீவிர் அறிந்தவை யாவை?
35. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
36. டாடா இரும்பு எஃகு நிறுவனம் (TISCO) பற்றி குறிப்பு எழுதுக.
37. 1909 – ஆம் ஆண்டு மின்டோ– மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தைக் கூறுக.
38. இந்திய தேசிய காங்கிரசலிருந்து சுபாஷ் சந்திரபோஸ் நீக்கப்பட்டதற்கானக் காரணங்களை எழுதுக.
39. இந்திய அரசமைப்பின் தனித்தன்மைகள் யாவை?
40. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்காரணங்கள் யாவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும்.** 7x5=35

41. அ) இந்திய நடுத்தர வர்க்கத்தில் மேற்கத்தியக் கல்வியின் தாக்கத்தையும் பின்னர் அது இந்தியச் சமூகத்தைச் சீர்திருத்தவும் மற்றும் மீட்டுருவாக்கம் செய்திட ஆற்றிய பங்கினை விவாதிக்கவும். (அல்லது)
ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ. சிதம்பரத்தின் பங்கினை பற்றி எழுதுக.

42. அ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவக்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக. (அல்லது)
ஆ) ஒத்துழையாமை இயக்கத்திலிருந்து சட்டமறுப்பு இயக்கம் எவ்வழிகளில் மாறுபட்டிருந்தது?

43. அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக. (அல்லது)
ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச்சென்றது?

44. அ) ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசியத்தில் ஏற்படுத்திய தாக்கம் என்ன? (அல்லது)
ஆ) இராஜாஜி திட்டம் பற்றி ஒரு பத்தி எழுதுக.

45. அ) இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் கப்பற்படைகலகம் ஒரு சிறப்பான அத்தியாயம் என ஏன் கருதப்படுகிறது? (அல்லது)
ஆ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக படேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.

46. அ) இந்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை கோட்பாடுகள் யாவை? அணி சேரா இயக்கத்தில் ஆப்பிரிக்க ஆசிய நாடுகளை இணைத்ததில் பிரதமர்நேரு அவர்களின் பங்கினை விவரி. (அல்லது)
ஆ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் தேசிய இயக்கத்துடன் தொடர்புடைய கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
1. ஜீனாகத் 2. ஹைதராபாத் 3. தூத்துக்குடி 4. கல்கத்தா 5. நாக்பூர்

47. அ) முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக. (அல்லது)
ஆ) 1930–1950 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தின் ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோட்டில் வரைந்து காட்டுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com